"நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு! கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, குடிமங்கலம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அனிக்கடவு ஊராட்சியில் ஒன்றிய கழக செயலாளர் ச.கிரி தலைமையில், அவைத் தலைவர் தா.அற்புதராஜ் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ஆம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தலைமை கழக பேச்சாளர் கோவை கி.துரைமுருகன், பொள்ளாச்சி செந்தில்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

"நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு! கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டம், மூலனூர் கிழக்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் புஞ்சைத்தலையூர் ஊராட்சி, சி.எம்.மஹால் அருகில் ஒன்றியச் செயலாளர் ப.பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர், மாவட்ட கழகப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், தலைமைக் கழக பேச்சாளர் கோவை நல்லதம்பி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் கன்னிவாடி பேரூர் கழக செயலாளர் சுரேஷ் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை கழகச் செயலாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர் .

மதுரையில் நடைபெறும் கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில்

பெரம்பலூர் மாவட்ட அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும் பங்கேற்பு!

மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

பெரம்பலூர், மே 10 -

பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்,

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ஏ.கேஅருண் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார்,

தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பட்டு செல்வி ராஜேந்திரன்,

எஸ்.அண்ணாதுரை, அழகு.நீலமேகம், ஆர்.முருகேசன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார்,வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், அரசு வழக்கறிஞர் ப.செந்தில்நாதன்,

அரும்பாவூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் கழகச் செயலாளர் செல்வலெட்சுமி சேகர், லெப்பைக்குடிக்காடு பேரூர் கழகச் செயலாளர் ஏ.எஸ்.ஜாகிர்உசேன், குரும்பலூர் பேரூர் கழகச் செயலாளர் எம்.வெங்கடேசன்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கவியரசு, மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் ஆர்.சுந்தர்ராஜ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.ரமேஷ், முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் க.ராமலிங்கம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல்,

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆர்.குமார்,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.ராசா, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய,நகர, பேரூர் கழகங்களில் வாட்ஸ்அப் குழுக்கள் உருவாக்குவதற்காக மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் படிவங்கள் வழங்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது!

இந்தியாவிற்கே முன்னோடியாக விளங்கும் திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய "நாடு போற்றும் நான்காண்டு" சாதனைகளை விளக்கி அனைத்து ஒன்றியங்களிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது எனவும்,

மதுரையில் வருகின்ற ஜீன்01 ஆம் தேதி நடைபெற இருக்கின்ற கழகத்தின் பொதுக்குழு கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் இருந்து அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும் கலந்து கொள்வது எனவும், ஜீன் 3 , முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்டத்தில் பொதுக்கூட்டம், கருத்தரங்கம் நடத்துவது எனவும், மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைக்கழகங்களிலும் கழகக் கொடியேற்றி, இனிப்புகள் வழங்குவது எனவும்,

பெரம்பலூர் நகராட்சியை மாநகராட்சியாக அறிவித்தற்கும்,

ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம், கொளக்காநத்தம் ஊராட்சியில் அரசுக் கலை அறிவியல் கல்லூரி அறிவித்தற்கும்,

வேப்பந்தட்டை ஒன்றியம், வேப்பந்தட்டையில் புதிய தீயணைப்பு நிலையம் அறிவித்தற்கும்,

பெரம்பலூர் தீயணைப்பு நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு நிதி வழங்கிய மாண்புமிகு கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கும், கழக துணைப் பொது ச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தும்,

மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர் மனைவி பா.விஜயா மறைவிற்கும்,

ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் தாயார் எம்.சாரதாம்பாள் மறைவிற்கும்,

வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் செ.நல்லதம்பி தந்தை செல்லப்பிள்ளை மறைவிற்கும்,

வேப்பூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சி.ராஜேந்திரன் தாயார் சி.அஞ்சலை அம்மாள் மறைவிற்கும்,

பெரம்பலூர் முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் மீனா அண்ணாதுரை தாயார் பாப்பம்மாள் மறைவிற்கும்,

மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் ஜெர்மன் ஜாகிர் மறைவிற்கும்,

ஆலத்தூர் மேற்கு ஒன்றிய அவைத்தலைவர் அ.ராமராஜ் மறைவிற்கும்,

வேப்பூர் வடக்கு ஒன்றியம்,சிறுமத்தூர் ஒன்றிய குழு முன்னாள் உறுப்பினர் தேவா தாயார் பாப்பா மறைவிற்கும்,

பெரம்பலூர் நகர 21 ஆவது வார்டு முத்துக்குமார் தாயார் அழகம்மாள் மறைவிற்கும்,

பெரம்பலூர் நகராட்சி 6ஆவது வார்டு உறுப்பினர் ர.சித்தார்த் தந்தை ரவி மறைவிற்கும்,

மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் பாலமுருகன் தாயார் மனோன்மணி மறைவிற்கும்,

வேப்பூர் தெற்கு ஒன்றிய பொருளாளர் கண்ணன் சகோதரர் பால்ராஜ் மறைவிற்கும்,

ரசுலாபுரம் கிளைச் செயலாளர் சேகர் தாயார் சுசீலா மறைவிற்கும்,

மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் சரவணன் மறைவிற்கும் இரங்கல் தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட துணைச் செயலாளர் சன்.சம்பத் நன்றியுரையாற்றினார்.

கடலூர் மஞ்சக்குப்பம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு வைப்புநிதி வழங்கும் நிகழ்ச்சி டாக்டர் பிரவீன் அய்யப்பன் தலைமையில் பள்ளி தலைமை ஆசிரியை செந்தமிழ்ச்செல்வி, சுரேஷ்மல் சோர்டியா ஆகியோர் முன்னிலையில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் கலந்து கொண்டு பள்ளிக்கு வைப்பு நிதியாக ரூ.7 லட்சத்தை முதன்மை கல்வி அலுவலர் எல்லப்பனிடம் வழங்கினார். நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்க தலைவர்கள் ஆதி பெருமாள், ரவிச்சந்திரன், கவுன்சிலர் சுமதி ரங்கநாதன், கடலூர் கோல்டன் சிட்டி லயன்ஸ் கிளப் மாவட்ட தலைவர் சண்முகம், கிளப் தலைவர் ஜெயச்சந்திரன், செயலாளர் சேதுராமன், பொருளாளர் விஜயன், மூத்த உறுப்பினர் ரங்கநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ரூ.702 கோடி வழிவகைக் கடன்

கரும்பு விவசாயிகளுக்கு ரூ.1,849 கோடி ஊக்கத் தொகை!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

கள்ளக்குறிச்சி, மே 10 -

தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளில் 6,09,030 கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.1,145 கோடியும், வழிவகைக் கடனாக ரூ.702 கோடியும் என மொத்தம் ரூ.1,847 கோடி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கச்சிராயப்பாளையத்தில் உள்ள கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை-IIன் பராமரிப்பு, விரிவாக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று (08.05.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது சர்க்கரைத் துறை இயக்குநர் த.அன்பழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், கள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜே.மணிக்கண்ணன் ஆகியோர் உடனிருந்தார்கள்.

தொடர்ந்து சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை-II அலுவலகத்தில் கரும்பு விவசாய சங்க பிரதிநிதிகள், கரும்பு விவசாயிகள், சர்க்கரை ஆலைப் பணியாளர்கள், அலுவலர்கள் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு ஆலையின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்தார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், கச்சிராயப்பாளையத்தில் உள்ள கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை - IIன் மொத்தம் 28,228 கரும்பு விவசாய அங்கத்தினர்கள் உள்ளனர். இவர்களில் சராசரியாக 6,000 விவசாய அங்கத்தினர் கரும்பு சாகுபடி செய்து ஆலை அரவைக்கு அனுப்பி வைக்கின்றனர். இந்த ஆலை கடந்த 2024-25ஆம் அரவைப் பருவத்தில் 2,62,264 மெ.டன் அரவை செய்து 8.37 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானத்தை எய்தியுள்ளது. மேலும் எதிர்வரும் 2024-25 சிறப்பு மற்றும் 2025-26 முதன்மை அரவைப் பருவத்திற்கு மொத்தம் இதுவரை 9,273 ஏக்கர் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 3,35,000 மெ.டன் அரவை செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.

மேலும் அரவை செய்யப்பட்ட கரும்பிற்கு கரும்பு கிரயத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.3,151.00 வீதம் ரூ.82.64 கோடி நிலுவை யின்றி விவசாய அங்கத்தினர்களுக்கு உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளதுடன் கடந்த 4 ஆண்டுகளில் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை-II அங்கத்தினருக்கு சுமார் ரூ.40.42 கோடி சிறப்பு ஊக்கத் தொகையாக தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்திலேயே அதிகளவு கரும்பு பதிவு செய்த ஆலையாக திகழ்வதுடன் இவ்வாலை தேசிய அளவிலும் மாநில அளவிலும் இதுவரை 54 விருதுகள் பெற்று தமிழகத்தின் சிறப்பான ஆலையாக திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 6,09,030 கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.1,145 கோடியும், வழிவகைக் கடனாக ரூ.702 கோடியும் என மொத்தம் கரும்பு விவசாயிகளுக்கு ரூ.1,847 கோடி வழங்கியுள்ளார்கள். இதேபோன்று ஏற்கனவே 10 ஆண்டுகளில் கரும்பு டன்னிற்கு ரூ.750 உயர்த்தி வழங்கியதைத் தற்பொழுது கடந்த 4 ஆண்டுகளிலேயே ரூ.750 உயர்த்தி வழங்கி தற்பொழுது கரும்பு டன்னிற்கு ரூ.3,500 வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் கூடுதலாக கரும்பு விவசாய சாகுபடி செய்யும் பட்சத்தில் ரூ.4,000 வரை ஒரு டன்னிற்கு வழங்க வாய்ப்பு கிடைக்கும்.

இங்குள்ள ஆலைப் பணியாளர்களின் கோரிக்கையான தற்காலிக பணியாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு இணைமின் திட்டப் பணிகள், ஆலைக்கு கூடுதல் வசதிகள் உள்ளிட்ட ஏனைய கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் இந்த ஆலையின் மூலம் இப்பகுதியில் கூடுதலாக 7,500 ஏக்கர் கரும்பு சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும். இதுகுறித்து கிராமப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மற்றும் விவசாயிகளிடம் கரும்பு விவசாய பிரதி நிதிகள் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது சர்க்கரைத்துறை கூடுதல் இயக்குநர் பி.பாலமுருகன், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை இணைப் பதிவாளர்ஃ செயலாட்சியர் கோ.யோகவிஷ்ணு, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திருமதி.இரா.புவனேஷ்வரி பெருமாள், சின்னசேலம் ஒன்றியக்குழுத் தலைவர் சத்திய மூர்த்தி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கரும்பு விவசாய சங்க பிரதிநிதிகள், கரும்பு விவசாயிகள், சர்க்கரை ஆலை அலுவலர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்புத் திட்ட முகாமில் பல்வேறு துறைகள் சார்பில்

244 பயனாளிகளுக்கு - ரூ.87.93 இலட்சத்தில் நலத்திட்ட உதவிகள்!

மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமார்ச–சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் வழங்கினர்!

கிருஷ்ணகிரி, மே 10 -

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், புளியம்பட்டி கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெற்றது மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில் பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு மக்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் எடுத்துக் கூறி அத்திட்டங்கள் மூலம் பொதுமக்கள் எவ்வாறு பயனடைய முடியும் என்பதை நேரடியாக துறை சார்ந்த அலுவலர்கள் விளக்கம் அளிக்கும் வகையில் இந்த மக்கள் தொடர்பு திட்ட முகாம் மாதந்தோறும் நடத்தப்படுகிறது. பொதுமக்கள் எவ்வித சிரமமின்றி அரசின் திட்டங்கள் மூலம் பயன்பெறும் வகையில் தங்கள் வசிக்கும் இருப்பிடத்திற்கு அருகிலேயே கோரிக்கை மனுக்களை பெறுவதற்கு மக்களுடன் முதல்வர், உங்களைத் தேடி உங்கள் ஊரில் உள்ளிட்ட பல்வேறு திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு ஒரு மாதகாலத்திற்குள் தீர்வு காணப்படும். இம்மக்கள் தொடர்பு திட்ட முகாமில் வருவாய் துறை, ஊரக வளர்ச்சித் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் துறை, உணவுப்பொருள் வழங்கல் துறை உள்ளிட்ட அனைத்து துறைகள் சார்பாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவது குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் பொதுமக்களுக்கு நேரடியாக எடுத்துரைக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் ஆட்சேபனை இல்லாத புறம்போக்குகளில் ஐந்து வருடங்களுக்குமேல் குடியிருப்பவர்களுக்கு வரன்முறை திட்டத்தின் மூலம் சுமார் 5 இலட்சம் பட்டாக்கள் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வெகுநாட்களாக நகர்ப்புற பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு 7 ஆயிரம் பட்டாக்கள் வழங்கப்பட உள்ளது. இது தொடர்பாக 02.05.2025 அன்று அனைத்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் ஆட்சேபனை இல்லாத புறம்போக்குகளில் வெகு நாட்களாக குடியிருக்கும் மக்கள் பட்டா வேண்டி விண்ணப்பிக்க முகாம்கள் நடத்தப்பட்டது. அம்முகாம்கள் மூலம் பெறப்பட்ட 7,500 மனுக்களுக்கு ஒரு மாதகாலத்திற்குள் பரிசீலனை செய்து பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேப்போல் வனப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கும் வன உரிமைகள் சட்டத்தின் கீழ், பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், வாடகை வீட்டில் இருப்பவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பாக, தனியார் நிலங்களை கையகப்படுத்தி நிலமற்ற ஏழை மக்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் 15 ஆயிரம் நபர்களுக்கு விரைவில் வழங்கப்படும்.

பெண்கள் முன்னேற்றத்திற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. விடியல் பயணத் திட்டத்தின் கீழ் நகரப் பேருந்துகளில் மகளிர்கள் இலவசமாக பேருந்து பயணம் மேற்கொள்ளலாம். கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ், மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. விடுபட்ட தகுதியான பயனாளிகளுக்கு விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் இது போன்ற திட்டங்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் தெரிவித்தார்.

தொடர்ந்து மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் ஆகியோர் வருவாய்த் துறை, சமூக பாதுகாப்பு திட்டம், வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை, மாவட்ட தொழில் மையம் என பல்வேறு துறைகள் சார்பாக 244 பயனாளிகளுக்கு 87.93 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் பச்சையப்பன் உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.